
## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
## அவர்கள் அருளிய

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்



> "... இமயம் முதல் கன்னியாகுமரி முனை வரை உள்ள அத்தனைக் கோயில்களிலும் தமிழ்மொழியில்தான் சக்கரங்கள் இருக்கின்றன. அந்த கடவுள்களுக்கு தமிழ்மொழிதான் தெரியும். இதை முதலிலே தமிழன் தெரிந்து கொள்ள வேண்டும். ..."

## சாதி வேற்றுமைகளால் தமிழர்கள் பிறமண்ணினரிடம் அடிமையான இழிநிலை

**தை மாத வெளியீடு (Jan2015 - Feb2015)**

**மெய்யான இந்துமத ஆண்டு 43,73,116**

காணிக்கை ரூ.10/-

மனிதனை கடவுளாக்குவதற்கு உரிய வழிவகைகளைக் கூறுவதே இந்து வேதம்.

# உள்ளுறை

**1. சித்தர் நெறியும், சாதி இன மொழி வெறிகளும்.**

**2. மெய்யான இந்துமதத்தில் சாதி வேற்றுமைகளே கிடையாது.**

பதினெண்சித்தர் பீடாதிபதியின் அருளாட்சி ஆணைகளில் 10வது ஆணை.

**3. சாதிகளை ஒழித்தேயாக வேண்டிய கட்டாயச் சூழ்நிலை.**

பதினெண்சித்தர் பீடாதிபதியின் அருளாட்சி ஆணைகளில் 18வது ஆணை.

**4. அருணகிரியார் வரலாற்றில் *பொய்யான ஹிந்துமதத்தின்* ஆபாசக் கற்பனை.**

**'மனித இனம் கண்ட முதல் மதம் இந்துமதம் எனப்படும் சித்தர் நெறியே.'**

**'மதமே மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்த வல்லது.'**

**'கோயிலே மனிதகுல வரலாறு; அதுவே அனைத்துக்கும் தாய்.'**

**'வழிபாடே மனிதப் பண்பாட்டின் உயிர்நாடி.'**

**'மந்திரமும் மருந்தும் மனிதனின் கண்கள்.'**

**'என்னை யறிந்தால் உன்னை யறியலாம்; உன்னை யறிந்தால் முன்னை யறியலாம்.'**

**'தன்னை யறிவும் அறிவே மெய்யறிவு; பின்னை யறிவு பேயறிவு.'**

**- சித்தர் நெறி**

# <u>சித்தர் நெறியும், சாதி இன மொழி வெறிகளும்</u>

1) சித்தர் நெறி என்பது இன்றுள்ள இந்துமதமாகத்தான் கருதப்பட வேண்டியிருக்கிறது. எனவே, இன்றுள்ள இந்துமதத்தில் மேற்படி வெறிகள் எப்படியெல்லாம் இருக்கின்றன என்பதை அறிந்து, தெரிய வேண்டும். அதன்பிறகே இவையெல்லாம் இன்றுள்ள *போலியான ஹிந்து மதத்திற்கு*ரியவையா? (வடஆரியரின் வேதமதமான சனாதன தர்மம், வர்ணாசிரம தர்மம், மனு தர்மம், ... எனப்படும் <u>பிற மண்ணுக்குரிய அன்னிய மதமே இந்தப் *போலியான ஹிந்துமதம்*</u>. இதனுடைய வரலாறும், வாழ்வியலும் சமசுக்கிருத மொழியில்தான் இருக்கின்றன); அல்லது இந்த மண்ணுலகில் [@]43,73,086 ஆண்டுகளுக்கு முன்னால் மணீசர்களுக்காக (மண் + ஈசர் => மணீசர்; மண்ணுலகின் உயிரினங்களுக்குத் தலைவரான மணீசர்) தோற்றுவிக்கப்பட்ட சித்தர் நெறி எனும் **மெய்யான இந்துமத**த்துக்கு உரியவையா? என்ற பேருண்மையினை முறையாகவும் நிறையாகவும் விளக்கி உரைத்து நிலைநாட்ட வேண்டும்.

2) இன்றுள்ள இந்துக்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்களுக்கு **மெய்யான இந்துமதம்** என்ற ஒன்று இருப்பது தெரியாது! தெரியாது! தெரியாது! எனவே, இன்றைக்கு நாட்டு நடப்பில் உள்ள <u>சாதி, இன, மொழி வெறிகள் **மெய்யான இந்துமத**மான சித்தர் நெறிக்குரியவை அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல!</u> இந்தக் கருத்தை நம்மவர்கள் நன்கு புரிந்து

---

**[@] 1985ஆம் ஆண்டின் போது எழுதப்பட்டது இக்கட்டுரை.**

கொண்டால்தான் பிருமணர்களாலும், சமசுக்கிருதத்தாலும் **மெய்யான இந்துமதம்** கெடுக்கப்பட்டே *போலியான ஹிந்துமதம்* உருவாக்கப்பட்டது அல்லது போற்றிப் பேணி வளர்க்கப் பட்டது என்ற பேருண்மை தெளிவாகிடும்.

3) சாதி வேற்றுமைகளும், உயர்வு தாழ்வுகளும், தீண்டாமைக் கொடுமைகளும், சாதிகளனைத்தும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு காக்கப் பட்டேயாக வேண்டும் என்ற கருத்தும் *போலியான ஹிந்துமதத்திற்கே* உரியது. இன்றுள்ள *போலியான ஹிந்துமதத்தின்* தலைவர்களாக உள்ள பிருமண ஆச்சாரியார்களும், மடாதிபதிகளும், பீடாதிபதிகளும், சன்னிதானங்களும் மேற்படி சாதி, மத, இன, மொழி வேற்றுமைகளைத் தூண்டுகிறவர்களாகவும், போற்றிப் பேணி வளர்ப்பவர்களாகவுமே உள்ளார்கள்.

இவர்களுடைய இந்த வெறிகளை நியாயப் படுத்துவனவாகவே சமசுக்கிருத மொழியில் உள்ள அனைத்து வகையான இலக்கியங்களும் இருக்கின்றன. அதாவது, வேத இலக்கியங்கள், பிருமண இலக்கியங்கள், சனாதன தர்ம இலக்கியங்கள், ... முதலிய அனைத்துமே மேலே குறிப்பிட்ட சாதி இன மொழி வெறிகளை, ஏற்றத்தாழ்வுகளை, பிரிவினைகளை, தீண்டாமைகளை நியாயப்படுத்தி வலியுறுத்தி வளர்ப்பனவாகத்தான் இருக்கின்றன.

4) 'கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை'; 'உள்ளங்கை நெல்லிக் கனிக்கு ஆராய்ச்சி தேவையில்லை'; 'வெட்டவெளியில் இருக்கின்ற குன்றினுக்குப் பாதை தேடத் தேவையில்லை' என்பது போல்; சாதி மத இன மொழி வேற்றுமைகளுக்கு இன்றுள்ள பிருமணர்கள்தான் காரணம். இந்தப் பிருமணர்கள் தங்களுடைய தாய்மொழியாகவும், பூசைமொழியாகவும் கூறுகின்ற சமசுக்கிருத மொழியும் அதன் இலக்கியங்களும்தான் மேற்படி வெறிகளையெல்லாம் உழவனாகவும், வித்தாகவும், வேலியாகவும் இருந்து வளர்க்கின்றன.

எனவேதான், இந்தப் பிருமணர்களைத் திருத்துவதற்காக *போலியான ஹிந்துமதத்*தையும், அதனுடைய பிருமண ஆச்சாரியார்களையும், சன்னிதானங்களையும், பீடாதிபதிகளையும், மடாதிபதிகளையும் கண்டிப்பதுடன்; சமசுக்கிருத மொழியையும், அதன் இலக்கியங்களையும் மறுத்து வெறுத்தொதுக்கவும் முற்படுகிறது **மெய்யான இந்துமத** மறுமலர்ச்சிக்காக உள்ள இந்து மறுமலர்ச்சி இயக்கமும் (இ.ம.இ.) அதன் கீழுள்ள பன்னிரண்டுக்கும் மேற்பட்ட நிறுவனங்களும். இப்பேருண்மையினைப் பொறுமையோடும், பொறுப்போடும், நிதானத்தோடும் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட வேண்டும் நம்மவர்கள், அதாவது மெய்யான இந்துக்கள், அதாவது **மெய்யான இந்துமத** மூலவர்களாகவும் காவலர்களாகவும் உள்ள தமிழர்கள்.

5) **மெய்யான இந்துமதம்**தான் இன்றுள்ள அனைத்து வகையான மதங்களுக்கும் மூலமாகவும் தாயாகவும் இருக்கின்றது. அதாவது, **சித்தர் நெறியெனும் மெய்யான இந்துமதம்**தான் இம்மண்ணுலகில் தோற்றுவிக்கப்பட்ட முதல் மதம். எனவே, இதில் மாற்று மதங்களின் மீது பொருமையோ, போட்டியோ, வெறுப்போ, வெறியோ, ... பிறந்திருக்கவே இயலாது! இயலாது! இயலாது! இயலவே இயலாது! மேலும் மனித இன வகைகளும், மொழி வகைகளும், சாதி வகைகளும் தோன்றியிராத ஓர் ஆரம்பக் காலத்தில் பிறந்ததுதான் இந்த **மெய்யான இந்துமதம்** என்பதால்; இதில் இனவெறியோ, மொழிவெறியோ, சாதிவெறியோ பிறந்திருக்கவே முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!

6) இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புகளும், விண்வெளியிலிருந்து வந்த 48 வகை வழிபடு நிலையினர்களும், இவர்களைச் சார்ந்தவர்களும் இம்மண்ணுலகில் தோன்றிய அனைத்து வகையான மனித இனங்களோடும் இரண்டறக் கலந்து வாழ்ந்தே அருளுலக வாரிசுகளை வாழையடி வாழையாகத் தோற்றுவித்திருக்கிறார்கள். எனவே, **மெய்யான**

**இந்துமத**த்தின் காவலர்களுக்குச் சாதி, மத, மொழி, இன வேறுபாடுகள் கிடையவே கிடையாது! கிடையாது! கிடையாது!

7) பதினெண்சித்தர் பீடாதிபதிகளும், அவர்களைச் சேர்ந்தவர்களும் **தொழிலின் அடிப்படையில் அல்லது சித்திநிலையின் அடிப்படையில் தங்களை பிள்ளை, குருக்கள், பண்டாரம், ஓதுவார், தேசிகர், பூசாறி, பட்டர், தீட்சதர், அந்தணர், வேதியர், நாயக்கர், தேவர், மறவர், கள்ளர், அகம்படியர், விழுப்பறையர், அறையர், ஆசாறி, ஆச்சாரி, சேனாதிபதி, ... என்று பல பெயர்களால் குறித்துக் கொள்ளுகிறார்கள்**. எனவே, இவைகள் எல்லாம் சாதிப்பெயர்கள் அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல!

சாது + ஆதி => சாதி
சாதனை புரிந்தவர்களே சாதுக்கள்.

ஆகவே சாதுக்கள் எனப்படும் குறிப்பிட்ட சான்றோர்களின் வழிவந்தவர்களே தங்களைக் குறிக்கும் சொற்களாக உருவாக்கிக் கொண்டவைதான் இன்றுள்ள சாதிப்பெயர்கள். இதன்படிப் பார்த்தால் சாதிகளுக்கு இடையில் உயர்வு தாழ்வோ, ஏற்றத் தாழ்வு வெறியோ, தீண்டாமைக் கொடுமையோ உருவாவதற்கு இடமே இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! பிறமண்ணினரான பிருமணர்கள் இந்தச் **சாதி**யெனும் பொருளாழமிக்க அழகிய தமிழ்ச் சொல்லை ***ஜாதி*** என்ற தங்களின் சமசுக்கிருதச் சொல்லால் மூடி மறைத்ததால்தான் அனைத்து வகையான வெறிகளும் பிறந்தன. எனவே, **மெய்யான இந்துமத**த்துக்குச் சாதி, மத, இன, மொழி வெறி இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை!

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: சித்தரடியார் சுந்தரானந்தாவின் கையெழுத்தில் இருந்தது.//**

## பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்

## அருளாட்சி ஆணை எண்:10

# மெய்யான இந்துமதத்தில் சாதி வேற்றுமைகளே கிடையாது

தமிழகம் முழுவதுமுள்ள கோயில்களைப் பற்றிய விவரங்களும், அவற்றின் சிறப்புக்களும் ஒவ்வொரு கோயிலிலும் அறிவிக்கப் படுகின்ற ஏற்பாடுகள் பல செய்யப் பட்டாக வேண்டும். இதற்காகத் தமிழகத்திலுள்ள கருவறை ஊழியர்கள், மற்றக் கோயில் பணியாளர்கள் கட்டாயமாக அவரவரால் இயன்றளவு தமிழகத்திலுள்ள பல கோயில்களுக்கும் சென்று தங்கி அறிவை வளர்த்துக் கொள்வதோடு; கோயில் ஊழியர்களுக்கிடையிலும், கருவறை ஊழியர்களுக்கிடையிலும் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில், எல்லாச் சாதியார்களும் அவரவர் ஊழ்வினைப் படியும், விதிப்படியும், ஆர்வப் படியும், முயற்சிப் படியும் இந்துமதத்தின் ஊழியராக, குருமார்களாக, குருக்கள்களாக, பூசாறிகளாக, பண்டாரங்களாக உயர்வதற்கு வழிவகை பிறந்திடும்.

அதாவது, எந்தவிதமான சாதி வேறுபாடுகளும் இல்லாமல் யாராக இருந்தாலும் அருளுலகில் எத்தகைய உயரிய அருள் நிலைகளையும் பெறலாம். அப்பொழுதுதான் பிறமண்ணினரான பிருமணர் என்னும் வடஆரியர்கள் தமிழர்களுக்கிடையில்; **'வாழுகின்ற இடங்களாலும், செய்கின்ற தொழில்களாலும் இருந்த சிறப்புப்**

**பெயர்கள் கடுமையான ஏற்றத் தாழ்வும், தீண்டாமையும் உடைய சாதிகளாக உருவாக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட சூழ்ச்சிகளை முறியடிக்க முடியும். அதாவது தமிழர்கள் சாதி உணர்வுகளால்தான் பல்வேறு தனித்தனிப் பிரிவுகளாகப் பிரிந்து ஒருவரோடொருவர் போட்டியும், பொறுமையும், உயர்வு தாழ்வு வெறியும் வளர்த்துக் கொண்டு; இனப் பற்றையும், மொழிப் பற்றையும், நாட்டுப் பற்றையும் புறக்கணித்து விட்டார்கள்**'.

இதனால்தான் அன்னியர்கள் தமிழர்களுக்குள் வேற்றுமையையும், எந்நேரமும் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்ற பிரிவுகளையும் வளர்த்துத் தங்களுடைய ஊடுருவலையும், மறைமுக ஆதிக்கத்தையும், சுரண்டலையும் நிலையாக்கிக் கொண்டு விட்டார்கள். இந்த அன்னியர்களின் கோரப் பிடியிலிருந்து தமிழர்களை விடுவிக்க வேண்டுமென்றால்; **மெய்யான இந்துமதத்தை** தமிழர்களாவது முழுமையாகப் புரிந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும். அதற்கு **மெய்யான இந்துமதத்தின்** வளவளர்ச்சிக்காகவும், வலிமைச் செழிச்சிக்காகவும், மறுமலர்ச்சிக்காகவும், ஆட்சி மீட்சிக்காகவும் நேரடியாகச் செயலில் ஈடுபட வேண்டும்.

அதற்கு உடனடியாகத் தேவைப்படுவது அன்னிய நாடுகளில் வாழுகின்ற தமிழர்கள் தங்களுக்குள் சாதிவெறி இல்லாமல் திருமணத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு பற்றோடும், பாசத்தோடும், ஒற்றுமையோடும் வாழ்வது போல; தமிழகத்திலுள்ள **அனைத்துச் சாதியினரும் சாதிவெறிகளை முழுமையாக விட்டுவிட்டுத்** திருமண உறவுகளையும், பிற உறவு முறைகளையும், உரிமைகளையும் புதுமையாகப் பத்தியின் பேரால் உருவாக்கிக் கொண்டேயாக வேண்டும். அதாவது, **தமிழன்** என்ற ஒரே சொல்லின் கீழ் தமிழகத்து மக்கள் அனைவரும் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் ஒருவரோடு ஒருவர்

சமத்துவமாகக் கலந்து பழகிப் பற்றோடும், பாசத்தோடும் ஒற்றுமையாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இதன் அடிப்படையில்தான் கண்கவர் விண்ணுயர்ந்த கோபுரங்களைக் கட்டும் பணியிலும், அருட்படை திரட்டுவதிலும், அருளாட்சி அமைப்புப் பணியில் ஈடுபடுவதிலும், இயக்குவதிலும் சாதிமத வேறுபாடுகள் முழுமையாகப் புறக்கணிக்கப் பட்டுள்ளன! புறக்கணிக்கப் பட்டுள்ளன! புறக்கணிக்கப் பட்டுள்ளன!

எனவே, **மெய்யான இந்துமதத்தின்** உயிர்நாடிக் கொள்கையான

'மனிதனுக்கு எண்ணற்ற பிறவிகள் உண்டு';

'மனிதன் ஒரு பிறவியில் பிறக்கின்ற அதே நாட்டிலோ, இனத்திலோ, மதத்திலோ, சாதியிலோதான் மறுபிறவியிலும் பிறக்க வேண்டும் என்பது கட்டாயமுமில்லை! திட்டமுமில்லை!';

'ஒரு பிறவியில் ஆணாகப் பிறக்கின்றவன் மறுபிறவியில் ஆணாகப் பிறக்க வேண்டும் என்ற கட்டாயமுமில்லை! திட்டமுமில்லை!' (அருளுலக நியதிப்படி அல்லது நீதிப்படி);

'எந்தவொரு மனிதனும் குருவருளினால் பழம்பிறவித் தொடர்புகளை அறுத்துக் கொள்ளலாம், மறுபிறவிகளைத் தடுத்துக் கொள்ளலாம்'

.... இந்தப் பலபிறவிக் கொள்கையின் அடிப்படையில் மெய்யான இந்துக்கள் அனைவரும் சாதிவெறிகளை, மதவெறிகளை, இனவெறிகளை, நாட்டுவெறிகளை முற்றிலும் அகற்றிக் கொள்ள வேண்டும். இதுவே அருளாட்சி ஆணையாகும்.

ஆனால் விசயாலயன் காலத்திலிருந்து அருட்பேரரசு உருவாகி வளர்ந்து வளம் பெற்று வலிமையுற்று உயரிய நிலையில் இருக்கும் இன்றைக்கு அருள்மொழித் தேவனான இராசராச சோழன் வடஆரிய மாயையாலும், பிரும்மணச் சூழ்ச்சியாலும், சனாதன வேதமதப் பித்தாலும், வடஆரியக் களியாட்ட வெறியாலும் விளைந்த அடிமைப் புத்தியால்

சாதிவெறிகளை, மதவெறிகளை நியாயப் படுத்தி நீதிக்குரியவையாக்கி விட்டான்.

இந்தத் தவறான சித்தாந்தத்தின் செயலகமாக யாம் உருவாக்கிய தஞ்சைப் பெரியவுடையார் கோயில் பயன்பட்டு விடக் கூடாது. இதனை மீறுபவர்கள் நெடிதுயர்ந்த வில்லின் அம்புகளுக்கும், கூர் வேலுக்கும் பதில் சொல்லியேயாக வேண்டும். அரசவை முதல் ஆண்டி மடங்கள் வரை இந்த பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாணைகளை ஏற்பவர் என்றும், எதிர்ப்பவர் என்றும் இரு பிரிவினர்கள் தனித்தனியாக அணி திரண்டு போரிட்டேயாக வேண்டும். அதில் கொட்டும் குருதி அள்ளித் தெளிக்கப் பட்டோ, அல்லது அருவியாக கொட்டி நீராட்டியோ **மெய்யான இந்துமத**த்தைப் புனிதப் படுத்தியேயாக வேண்டும். *பொய்யான ஹிந்துமதத்தின்* உயிர்நாடியான சமசுக்கிருதத்தை ஒவ்வொரு தமிழனும் புரிந்து புறக்கணிக்க வேண்டும் அல்லது புதைகாட்டிற்கு அனுப்ப வேண்டும். இனியும் வடஆரிய மாயைகளையும், சனாதன வேதமதத்தின் சுரண்டல்களையும், பிராமணச் சூழ்ச்சிகளையும் அனுமதிக்கவே முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது!

அதாவது தமிழர்களை என்றென்றும் ஒற்றுமைப் பட முடியாமல் ஏற்றத் தாழ்வு உணர்வுகளாலும், வேற்றுமை வெறிகளாலும், தொட்டால் தீட்டு எனும் திட்டத்தாலும் .... எண்ணற்ற பிரிவுகளாக்க முயலும் வடஆரியச் சூழ்ச்சிகளை அழித்தொழித்தேயாக வேண்டும். இந்தச் சித்தாந்தத்தின் செயலகங்களாகத்தான் தமிழகத்திலுள்ள 48 வகையான வழிபாட்டு நிலையங்களும், 48 வகையான கருவறைகளும், சித்தியாளர்களும், முத்தியாளர்களும் செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டாக வேண்டும்! செயல்பட்டாக வேண்டும்!

இந்த அருளாணையைக் குருவாணையாக ஏற்றுச் செயல் படுத்துபவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் அருட்பேரரசின்

வருங்காலமும், தமிழக மக்களின் வருங்காலமும் அமையும். எனவே, பீடாதிபதியின் அருளாணைகளைப் புரிந்தும் புரிய வைத்தும் செயல்படுக! செயல்படுக! செயல்படுக!

-----------------------

***குறிப்பு:-*** **இந்த அருளாணையில் முன்னுக்குப் பின் கருத்து வேறுபாடு இருப்பது போல் தோன்றுகிறது. சாதிவெறியை மட்டும் கண்டிக்காமல் நாட்டு வெறி, இனவெறி முதலியவைகளும் கண்டிக்கப் பட்டுள்ளன. ஆனால், தமிழர்கள் ஒன்று சேருவதற்காக, ஒற்றுமைப் படுவதற்காக வடஆரியர்களையும், பிற நாட்டவர்களையும் எதிர்த்து அல்லது புறக்கணித்துப் போராட வேண்டிய செயல் திட்டத்தையே இந்த அருளாணை வழங்குகிறது.**

இதற்கு விளக்கமாக குருபாரம்பரியத்தில் உள்ள பல செய்திகளின் அடிப்படையில் ஒரு தெளிவுரை இங்கு வழங்கப் படுகிறது. அதாவது தமிழர்களிலேயே பலர் பிற மொழியினர்களையும், பிற இனத்தினர்களையும், பிற நாட்டவர்களையும் மணந்து தனித்தனிக் கூட்டங்களாகத் தனித்து வாழ நேரிட்டது. அதாவது புதிய புதிய கலப்பினங்கள் தமிழ் நாட்டில் ஆங்காங்கே ஆற்றிடைத் திட்டுக்கள் போல் தனித்தனியாக இருக்கின்றன. இவற்றைத் தமிழர்கள் ஏற்கனவே தங்களுக்குள் இருக்கின்ற சாதி வேற்றுமை வெறிகளோடு சேர்த்து விட்டார்கள்.

அதாவது, தமிழர்கள்; சீனர், சோனகர், யவனர் .... முதலியவர்களோடு திருமண உறவு கொண்டு உருவாக்கிய கலப்பினங்கள் தமிழர்களாக ஏற்றுக் கொள்ளப் படவேயில்லை. எனவே புதிய கலப்பினங்கள் தமிழையே தாய்மொழியாகப் பேசினாலும் கூடத் தமிழர்களால் பற்றோடும், பாசத்தோடும் ஏற்றுக் கொள்ளப் பட்டு ஒற்றுமையான வாழ்வு பெற முடியவில்லை.

இதைத் தீர்த்து வைப்பதற்காகத்தான் இந்தப் பதினோராவது அருளாணையில் தமிழர்கள் தமிழர்களுக்கிடையில் சாதி வெறி, இன வெறி, நாட்டு வெறி முதலிய வெறிகளை வளர்க்கக் கூடாது என்று கூறப்பட்டிருக்கிறது. இதைத் தவறாக யாரும் புரிந்து கொள்ளக் கூடாது.

**அதாவது இதிலிருந்து வலியுறுத்தப்படும் கருத்து; 'பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரிய வேத இனத்தினரையும் அவர்களின் மொழியான சமசுக்கிருத மொழியையும் புறக்கணிப்பதோ, மறுப்பதோ, வெறுப்பதோ, எதிர்ப்பதோ தவறல்ல' என்பதேயாகும். கட்டாயமாக அன்னியரான பிருமணர்களையும், சமசுக்கிருத மொழியையும் எதிர்த்துப் போரிட்டால்தான் தமிழர்களுக்குள் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் உருவாகும்; தமிழர்களின் வீழ்ச்சி நிலைகளையும், தாழ்ச்சி நிலைகளையும் மாற்றிட முடியும்; தனிமனிதர்களுக்குத் தன்னம்பிக்கையும், தன்மானப் பிடிப்பும், பண்பாட்டுப் பிடிப்பும், மெய்யான இந்துமதத்தில் விருப்பும், நம்பிக்கையும், இன ஒற்றுமையும், ஆர்வமும், மொழியுணர்வில் வெறியும் பிறப்பிக்கப்படும்! பிறப்பிக்கப்படும்!! பிறப்பிக்கப்படும்!!!**

***இந்த விளக்கத்தைக் கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமிப் பிள்ளை எழுதியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.***

---

நகல் நல்குபவர்: அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு, குருவின் பதிலி சீ.மணி, 24/8/87, நள்ளிரவு 12.35மணி.

**[உண்மை நகல்]**

**//இதன் மூலநகல்: வேம்படிதாளம் சித்தரடியார் சீ.மணி அவர்களால் எழுதப் பட்ட கையெழுத்துப் பிறதி நகல்.//**

# பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்

## அருளாட்சி ஆணை எண்:18

# சாதிகளை ஒழித்தேயாக வேண்டிய கட்டாயச் சூழ்நிலை

எட்டுப் பேர்கள் அருட்பேரரசுக்குரிய அரியணையில் அமர்ந்த பிறகுதான் அருள்மொழித்தேவன் உருவாக முடிந்தது. இதனை மறந்தே இராசராசன் தன்னிச்சையாகத் தான்தோன்றித்தனமாகச் செயல்படுகிறான். இந்துமத மறுமலர்ச்சிக்காக உருவாக்கப் பட்ட அருட்பேரரசு; பிருமணர்களின் சனாதன வேதமத வளவளர்ச்சிக்காக மட்டுமே உழைக்கின்ற அவல நிலை பிறந்து விட்டது.

இதனால் போர் வீரப் பரம்பரையினரில் தொழிலால் படையாட்சி, கள்ளர் (ஒற்றர்), மறவர், தேவர், அம்பலம், அரையர் (ராயர்), முதலி, பிள்ளை, பண்டாரம், அய்யர், ஆசாறி, [#]ஓட்டார், [$]சாத்தார், பறையர் (போரில் பறையடிப்போர்), [a]துடியர், [b]கடம்பர், [c]பாணர் [d]நாயக்கர், [e]சேனாதிபதி .... என்று ஏற்கனவே பெயர் பெற்றிருந்தவர்கள்; அந்தந்தப் பெயர்களிலேயே தனித்தனிச் சாதிகளாக ஆக்கப் பட்டு சமுதாயத்தில் பிரிவுகளும், வேற்றுமைகளும், ஏற்றத் தாழ்வுகளும்,

---

**[#] - போரில் ஈடுபடாத வேலையாட்கள்**
**[$] - போர்த் தளவாடங்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளை ஓட்டுபவர்கள்**
**a, b - இசைக் கருவி இயக்குவோர்**
**c - வாய்ப்பாட்டு பாடுவோர்**
**d - படைப் பிரிவுகளில் சிறு பிரிவுகளின் தலைவர்**
**e - பெரிய படைப் பிரிவுகளின் தலைவர்**

சண்டைச் சச்சரவுகளும் அதிகமாக்கப் பட்டு விட்டன. இதனைப் பிறமண்ணினரான பிருமணர்கள் எனும் வடஆரியர்கள் நன்கு திட்டமிட்டுச் செயலாக்கிப் பெரியபெரிய வெற்றிகளைப் பெற்று விட்டார்கள். யார் காலத்திலும் இல்லாத சாதிகளின் எண்ணிக்கையும், பிரிவினை வெறியும், உயர்வு தாழ்வு பாராட்டும் வெறிப் போக்கும், இராசராசன் காலத்தில்தான் பெருகி விட்டன.

இதனால் *திருமண உறவுகள் அந்தந்தச் சாதிக்குள்தான் நிகழ வேண்டுமென்ற கட்டுப்பாடு பிருமணர்களின் மாபெரும் சதித் திட்டமாக உருவாகி விட்டது*. இந்தச் சதித்திட்டம் மாபெரும் வெற்றியாகி சாதிவெறி சுந்தர சோழனின் காலத்திலேயே கட்டுப் படுத்த முடியாத அளவு சண்டைகளாகவும், சிறுசிறு போர்களாகவும் நாட்டளவில் வளர்ந்து விட்டன. (சாது + ஆதி = சாதி) மிகப் பெரிய முனிவர்களை (சாதுக்களை) ஆதியாகக் கொண்டு தோன்றிய பரம்பரையினர் என்பதே இந்தச் சாதி என்ற சொல்லுக்குப் பொருள். இது தொழிலடிப்படையில் மக்களைப் பிரிக்கப் பிருமணர்களால் பயன்படுத்தப்பட்டு விட்டது. இவற்றையெல்லாம் ஒழித்துக் கட்ட உருவாக்கப் பட்ட ஆதித்த கரிகாலனைப் பிருமணர்கள் ஒழித்துக் கட்டினார்கள்.

அந்தப் பிருமணர்களின் ஆதரவாளனான அருள்மொழித் தேவன் இராசராசனாக மாறியதும் பிருமண அடிமையாகவே மாறிவிட்டான். இதனைப் பயன்படுத்திப் பிருமணர்கள் எண்ணூறுக்கும் மேற்பட்ட சாதிகளைத் தங்களின் சமசுக்கிருத மொழியின் சாத்திறங்களின் மூலம் சட்டப் பூர்வமாக்கிச் சாதிகளை நிலைத்த வடிவம் பெறச் செய்து விட்டார்கள். இதனால், தமிழர்கள் இன உணர்வு, இனப் பற்று, இன ஒற்றுமை, மொழிப் பற்று, நாட்டுப் பற்று, பண்பாட்டுப் பற்று, நாகரீகப் பிடிப்பு, மத ஒற்றுமை .... முதலிய அனைத்தையும் மறந்து துறந்து; மூட்டையை அவிழ்த்துக் கொட்டியதும் நாலாபக்கமும்

சிதறியோடும் நெல்லிக்காய்கள் போலாகி விட்டார்கள். இந்த நிலையை மாற்றுவது எளிதல்ல! எளிதல்ல! எளிதல்ல! எளிதேயல்ல!

தமிழர்களுக்கு இந்தச் சாதிப் பிரிவுகளால்தான் மாபெரும் வீழ்ச்சியும், தாழ்ச்சியும் விளைந்துள்ளது. இதனை இராசராசனால் இன்றைக்கு உணர முடியவில்லை. காலப்போக்கில் தமிழர்கள் சாதிகளால் பிரிந்து வேறுபட்டும், மாறுபட்டும் சண்டை சச்சரவுகளை வளர்த்துக் கொண்டே இருப்பார்கள். அப்போது பிருமணர்கள் நிலையாக உயர்ந்த சாதிக்காரர்களாக, தமிழகத்து மேட்டுக்குடி மக்களாக, தமிழர்களுக்குச் சாத்திரிகளாக, குருமார்களாக, ஆசிரியர்களாக மாறிடுவார்கள். அதாவது, தமிழர்களைச் சாதிச் சண்டைகளால் என்றென்றும் பிரிந்து கிடக்கும்படி சூழ்ச்சி செய்திட்ட பிருமணர்களே சமுதாயத்திலும், சமயத்திலும் உயர்ந்தவர்களாக, வழிகாட்டிகளாக, தலைவர்களாக என்றென்றும் விளங்கிடுவார்கள்.

இத்திட்டத்தை எவரும் எளிதில் அசைத்து விட முடியாதபடி "இந்தச் சாதிப் பிரிவுகளை கடவுளே ஏற்படுத்தியதாகவும்; சாதிகளையுடைய இந்துமதமே 'வர்ணாசிரம தர்மம்' காத்திடும், அதுவே சனாதன தர்மம் எனப்படும் வேதமதம், வேதத்திலேயே சாதித் தர்மங்கள் வலியுறுத்தப் பட்டுள்ளன" என்று கூறியும்; சாதி உயர்வு தாழ்வுகளையும், வேற்றுமைகளையும், சாதியடிப்படையில்தான் தொழில்களைச் செய்ய வேண்டுமென்ற சட்டதிட்டங்களையும் .... பிருமணர்கள் தங்களின் சமசுக்கிருத மொழியின் வேத இதிகாச புராணங்களின் மூலமும், சாத்திரங்களின் மூலமும் நியாயப்படுத்தி நீதிகளாகவும், நியதிகளாகவும், இந்துமதத் தர்மங்களாகவும், இந்துமதச் சமுதாயச் சட்டதிட்டக் கட்டுப்பாடுகளாகவும் ஆக்கி விட்டார்கள்.

இந்தச் சனாதன தர்ம வர்ணாசிரமக் கொள்கையுடைய வடஆரியப் புதிய இந்துமதம்தான் ***பொய்யான ஹிந்துமதம்*** என்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரூரால் குறிக்கப் படுகின்றது. அதாவது,

அவர் காலத்திலேயே சிலந்தி வலை பின்னுவது போல் இந்தச் சூழ்ச்சி மிக்க சுரண்டல்காரப் பிருமணர்கள் *பொய்யான ஹிந்துமதத்தை* உருவாக்கும் பணியில் ஈடுபட்டிட்டார்கள். இப்பணி இராசராசன் காலத்தில் முழுமையான வடிவமும் வாழ்வும் செயலும் செல்வாக்கும் பெற்று விட்டது.

எனவே, **உடனடியாகப் பிருமணர்கள் நமது வழிபாட்டு நிலையங்களுக்குள்ளும், கருவறைப் பூசைகளிலும், வெட்டவெளிக் கருவறைப் பூசைகளிலும், பிற திருவிழாக்களிலும், சமுதாயச் சடங்குகளிலும், திருநாள்களிலும் கலந்து கொள்ளக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! என்று உடனே அரசாணை விடுக்க வேண்டும். சமசுக்கிருத மொழியின் ஒலி கூடத் தமிழக எல்லைக்குள் கேட்கக் கூடாது. சீனர், யவனர், சோனகர் போல் இந்தப் பிருமணர்களும் ஊருக்கு வெளியே தனி இடங்களில்தான் வாழ வேண்டு**மென்று உடனே அரசாணை வழங்கப் படல் வேண்டும்.

இந்தப் பிருமணர்கள் ஊருக்குப் புறம்பாக, ஒதுக்குப் புறமாக ஒண்டி வாழும் ஒட்டக்கூத்தர் சேரிகளையமைத்தே வாழ வேண்டும். இல்லாவிட்டால், இவர்கள் வெட்டுக்கிளிக் கூட்டம் விளைந்த வயலை முழுமையாக நாசம் செய்து விடுவது போல்; தமிழர்களை முழுமையாக சிதைத்துச் சின்னுபின்னப் படுத்திக் கோழைகளாகவும், அடிமைகளாகவும், ஒற்றுமையற்ற அனாதைக் கும்பல்களாகவும், இலம்பாடித் திரியும் பஞ்சைகளாகவும், நாதியற்ற நாடோடிகளாகவும், சூடுசுரணையில்லாத நடைப்பிணங்களாகவும் மாற்றிடுவார்கள்! மாற்றிடுவார்கள்! மாற்றிடுவார்கள்!

எனவே, இவர்கள் (பிருமணர்கள்), அனைவரையும் ஏமாற்றுவதற்கு முன்னரே! இவர்களைத் தமிழ்ச் சமயத்திலிருந்தும், சமுதாயத்திலிருந்தும் உடனே அகற்றி ஒதுக்கி வைத்திடல் வேண்டும். இல்லாவிட்டால் என்றாவது ஒருநாள் காட்டு மிருகங்களை வேட்டையாடுவது போல்; இவர்களை (இந்தப் பிருமணர்களை) வேட்டையாடும் நிலைமை

வளர்ந்திடும்! வந்திடும்! எச்சரிக்கை. எனவே, இராசராசன் இந்தப் பிருமணர்களிடமிருந்து தனது இனத்தாரைக் காப்பாற்றிடத் துணிந்து அரசாணைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

அத்துடன் **ஒரே சாதிக்குள் திருமண உறவுகள் ஏற்படுத்தக் கூடாது என்ற தடையையும் விதித்து; அனைத்துச் சாதியினரும் ஒன்றுகிடக் கலப்புத் திருமணங்களை முழுமையாகத் தோற்றுவிக்க வேண்டும்**. சாதியினால் விளையக் கூடிய அனைத்து விதமான சண்டை சச்சரவுகளையும் கலவரங்களையும் உடனே அடக்கித் தீர்வு கண்டு நீதி வழங்கி முழுமையாக முடிவு செய்ய வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் அரசாங்கத்திலோ, பூசைகளிலோ, கல்விச்சாலைகளிலோ, மருத்துவக் கூடங்களிலோ, சேவலோன் கலைப் பயிற்சிச் சாலைகளிலோ, அங்காடிகளிலோ, சத்திர சாவடிகளிலோ, .... சாதி வேறுபாடு காட்டக் கூடாது; எவருடைய சாதியையும் விசாரிக்கக் கூடாது ... என்று அரசாணை விதிக்க வேண்டும்.

ஏனெனில் சூழ்ச்சி மிக்க சுரண்டல்காரப் பிறமண்ணினரான ‘பிருமணர்கள்’ சாதிகளின் அடிப்படையில் தமிழர்கள் வாழுகின்ற தெருக்களையும், நீராடுந் துறைகளையும், குடிதண்ணீர் நிலைகளையும், பிணம் போய்ச் சேரும் புதைகாடுகளையும், சுடுகாடுகளையும், குலதெய்வங்களையும், உடையுடுத்தும் வகைகளையும் .... தனித்தனியாகப் பிரித்து விட்டார்கள். இதனால், சாதிகளை ஒழிப்பது எளிதல்ல! எளிதல்ல! எளிதல்ல! எளிதேயல்ல!

அதனால், இந்தச் சாதிகளை உருவாக்கிப் பயிராக்கி வளர்த்துக் காத்து வாழ்க்கை நடத்தும் அன்னியர்களை, பிறமண்ணினர்களை, சாத்திரிகளை, பஞ்சாங்கப் பயல்களை, உஞ்சிவிருத்திகளை .... முழுமையாக ஒழிப்பது அல்லது தமிழ்நாட்டை விட்டே ஓட்டுவதுதான் வழி. ஆனால், இவர்கள் இமயம் முதல் குமரி வரை விரவிப் பரவிக் கிடக்கும் கட்டுப்பாடான சிறு கூட்டத்தார்கள். இவர்கள் எந்த மொழி பேசினாலும், தங்களுடைய சமசுக்கிருத மொழியின் மூலம்

ஒற்றுமையுடன் ஒருமைப்பாடும் கட்டுப்பாடும் வளர்த்துக் கொண்டே வாழுகிறார்கள்.

இவர்கள் அன்னியர்கள் என்பதால் தங்களுடைய இனம் குறைந்து விடாமல் பிற இனத்தாரோடு திருமண உறவுகளைச் செய்து கொள்ளாமல் இருக்கிறார்கள். மேலும் இவர்கள் தங்களுடைய வேத நாகரிகத்தை எள்முனையளவு கூட மாற்றிக் கொள்ளாமல் வறட்டுப் பிடிவாதமாக வெறி நிறைந்த தங்களுடைய நாகரிகப் பற்றை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் இவர்களுக்கிடையிலும் பற்றும், பாசமும், ஒற்றுமையும், கட்டுப்பாடும் இருக்கிறது. எனவே, இவர்கள் எதைச் செய்தாவது தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இவர்களுடைய மேலாமினுக்கி வாழ்க்கைக்கு பேருதவி புரிவதாகவே இருக்கிறது இவர்கள் உண்டாக்கிய *பொய்யான ஹிந்துமதம்*.

அதாவது *பொய்யான ஹிந்துமதத்தை* ஒழித்தால்தான் இந்தப் பிருமணர்களின் சூழ்ச்சியான ஆட்சியை ஒழிக்க முடியும். இவர்கள் எந்த நிகழ்ச்சிகளிலும் அல்லது முயற்சிகளிலும் வெளிப்படையாகவோ, நேரடியாகவோ ஈடுபடுவதேயில்லை. அதாவது, இவர்கள் திரைமறைவிலேயே இருந்து எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் காணிக்கையாக்கியோ அல்லது பலியாக்கியோ; எவரையும் தங்களுக்குச் சாதகமாக்கிப் பாதுகாப்புத் தேடிக் கொள்வார்கள்.

இதன்படிதான், இராசராசன் முழுமையாகப் பிருமணர்களின் காவலனாகி விட்டான். இந்தப் பிருமணர்களும் இராசராசனுக்குப் பாதுகையாகவும், பாதத் தூளிகையாகவும் ஆகி விட்டார்கள். எனவே, இராசராசன் எமது பதினெட்டு அருளாட்சி ஆணைகளை அரசாணைகளாக அறிவிப்பான் என்று நம்ப இயலவில்லை. அவனுடைய பாதுகாப்பில் உள்ள இந்தப் பிறமண்ணினர்களைக் கருவூர்த் தேவன் தனது அருட்படைகளோடு சென்று நேரடிப் போரில் ஒழிப்பதைத்

தவிர வேறு வழியில்லை. இதனை இராசராசனின் ஆட்சிக்கு எதிரான புரட்சியாகவோ, சதியாகவோ கருதத் தேவையில்லை.

ஏனெனில், இராசராசனின் அரசாங்கம் தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்துக்கும் துரோகமாக விரோதமாக தமிழின வீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும் காரணமாக இருக்கும் பிருமணர்களைக் கண்மூடித் தனமாகப் பாதுகாத்து வருகிறது. எனவே, தமிழ்மொழியையும், தமிழ் இனத்தையும் பாதுகாப்பதற்காக மாபெரும் குருதிப் புரட்சியின் மூலம்தான் கண்மூடித்தனமாகச் செயல்படும் அரசாங்கத்தை திருத்திட முடியும்! முடியும்! முடியும்! இதைத் தவிர எமக்கு வேறு வழி தோன்றவில்லை!

எனவேதான், பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் செய்தது போல்; யாம், தனிமனிதர்களை விழிச்சியும் எழிச்சியும் பெறச் செய்து கிளர்ச்சிமிகு புரட்சி வளவளர்ச்சி அடையச் செய்துள்ளோம். அதாவது, சமுதாயப் புரட்சியின் மூலம்தான் அரசால் சாதிக்க முடியாததையும் சாதிக்க முடியும் என்பதை மெய்ப்பிக்கவே தற்கொலைக்குச் சமமான வீரதீரச் செயல்களில் ஈடுபடக் கூடிய பட்டாளத்தை [பட்டு + ஆள் + அம் = ஆட்கள் மரணத்திற்கும் தயாராக இருப்பது] தயாரிக்க நேரிட்டது. இந்தப் பட்டாளத்தைத் தலைமை தாங்கி நடத்தக் கருவூர்த் தேவனுக்கு ஆணையும் பிறப்பித்து விட்டோம்.

இந்த உள்நாட்டுப் போரின் முடிவைப் பொறுத்துத்தான் இந்துமத மூலவர்களாகவும், காவலர்களாகவும் இருக்கின்ற தமிழர்களுக்கு வருங்காலத்தில் அமையப் போகும் விடிவு இருக்கும். எனவேதான், அருளாட்சி ஆணையை **"பதினெண் சித்தர் பீடாதிபதியின் அருளாட்சி ஆணைகள்"** என்று எமது கருத்துப் புரட்சியையும், செயல் புரட்சியையும் இலக்கியமாக எழுதி உள்நாட்டுத் தமிழர்களுக்கும்,

வெளிநாட்டுத் தமிழர்களுக்கும் ஆயிரக்கணக்கில் படியெடுத்து அனுப்பும் பணியை பல்கலைக் கழகத்தின் மூலம் துவக்கியுள்ளோம்.

இதையும் தடுக்க அரசாணை விடுக்கிறான் இராசராசன். இவனை எதிர்க்காமல் என்ன செய்வது? நாடு தழுவியுள்ள நிலக் கிழார்களும், வணிகர்களும் நமது பொருளாதார நூலினால் புண்பட்டு இராசராசனை ஆதரிப்பவர்களாக மாறிவிட்டார்கள். இதனால், தமிழ்நாட்டில் ஏற்கனவே இருக்கும் எண்ணற்ற சாதிகளுக்கு இடையில் ஏழை என்றொரு சாதியும், பணக்காரர் என்றொரு சாதியும், இவை இரண்டிலும் சேராத நடுத்தரச் சாதி என்றொரு சாதியும் தோன்றி விட்டன. இந்த மூன்று சாதிகளும்தான் மற்ற அனைத்துச் சாதிகளையும் வென்று உள்ளடக்கிப் புதிய போராட்டங்களையும் போர்களையும் வளர்த்து வருகின்றன.

இவைகளை ஒழிப்பதென்றாலும் அரசாங்கமே அனைத்தையும் தன்னுடமையாக்கிக் கொண்டு அனைவரையுமே உழைப்பாளிகளாக மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் துட்டுக் கடைக்காரர்களும், வட்டிக் கடைக்காரர்களும், பட்டுக் கடைக்காரர்களும், மிட்டாய்க் கடைக்காரர்களும், நவதானிய கடைக்காரர்களும் நாட்டை ஆளுவார்கள். இவர்களின் வடிவிலே வடபுலத்தார்களும், அன்னியர்களும், பிறமண்ணினர்களும்தான் தமிழ்ச் சமுதாயத்தையும், அரசியலையும் ஆட்டிப் படைக்கும் கேடு காலம் உருவாகிடும்.

அப்பொழுது இன்றுள்ள அருட்பேரரசு போன்று எந்த ஒரு பேரரசும் நிலைக்க முடியாது. ஏனெனில், பணவெறி பிடித்த பேராசைக்கார வியாபாரிகள் இந்தியாவில் நூற்றுக்கணக்கான சிற்றரசர்கள் ஆட்சி செய்தால்தான் அரசாங்கங்களுக்கு இடையில் உள்ள போட்டிகளையும், பொறாமைகளையும், பகைமைகளையும், சண்டை சச்சரவுகளையும், போர்களையும் பயன்படுத்திக் கொள்ளை இலாபம் சம்பாதித்திடுவார்கள்! சம்பாதித்திடுவார்கள்! சம்பாதித்திடுவார்கள்!

அதாவது, இந்த நாட்டை என்றென்றும் சூழ்ச்சியாகச் சுரண்டி வாழ வேண்டும் என்று நினைக்கின்ற சிறு கூட்டத்தார்கள் எப்போதுமே நாட்டில் சமய அடிப்படையிலோ, சமுதாய அடிப்படையிலோ, அரசாங்கத்தின் அடிப்படையிலோ பெரிய அளவில் ஒற்றுமையோ, கட்டுப்பாடோ, ஒருமைப்பாடோ, அமைதியோ, நிறுவனக் கட்டமைப்போ, நிர்வாக ஒழுங்கமைப்போ நிலைத்து உருவாகிடுவதை விரும்ப மாட்டார்கள்! விரும்ப மாட்டார்கள்! விரும்ப மாட்டார்கள்! விரும்பவே மாட்டார்கள்!

இத்தத்துவ அடிப்படையில்தான் இந்த நாட்டைச் சுரண்டி வாழ விரும்பும் பிறமண்ணினர்களும், அன்னியர்களும் சாதிகளின் அடிப்படையில் சமுதாயத்தையும், மதத்தின் அடிப்படையில் அரசியலையும் **வெறிநாய் கிழித்த கந்தல் துணி போல்** சின்னபின்னப் படுத்தி வருகிறார்கள். இதனை இன்றைக்கு இராசராசனால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, என்ன விலை கொடுத்தாவது **மெய்யான இந்துமதத்தை** மறுமலர்ச்சி அடையச் செய்தேயாக வேண்டும். அதற்காகப் *பொய்யான ஹிந்துமதத்தின்* கூறுபாடுகளையும், இயக்குநர்களான பிருமணர்களையும், அடிமைகளான இராசராசனைப் போன்றவர்களையும் முழுமையாக அழித்தொழிக்கும் பணியில் ஈடுபட்டேயாக வேண்டும். இந்த அழித்தொழிப்பு வேலையின் போதே **மெய்யான இந்துமதம்** செழிச்சியும், ஆட்சிமீட்சியும் அடையச் செய்யும் பணி துவக்கப் பட்டாக வேண்டும்.

அதற்காக, கடலுள் மறைந்த குமரிக் கண்டம் என்னும் இளமுறியாக் கண்டத்துப் பன்மலை யடுக்கம், தென் இமயம், தென் விந்தியம், தென் வேங்கடம் முதலான மலைகளைக் கருகுலமாகக் கொண்டு குருகுலங்களும், தருகுலங்களும், திருகுலங்களும் தமிழகமெங்கும் தொடர்ந்து உருவாக்கப் பட்டு; அனைத்து வகையான அருளுலக வாரிசுகளும் தொடர்ந்து <u>தமிழர்களுக்குத் தமிழர்களே</u> சமய, சமுதாய, அரசியல் தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும்,

துணைவர்களாகவும் அமைந்திடுவார்கள்! அமைந்திடுவார்கள்! அமைந்திடுவார்கள்!

அப்படித் தமிழர்களைத் தமிழர்களே எல்லாத் துறைகளிலும் ஆட்சி புரியும் நிலைமை வளப்பட்டு வலிமைப் பட்டிட்டால்தான் **பாம்பின் வாய்ப்பட்ட தேரை போல்** பிருமணர்களிடம் மாட்டிக் கொண்டிருக்கும் தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்! இதற்காகத்தான் பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகளை அருட்பேரரசின் பெருமன்னனான இராசராசன் உடனடியாகத் தனது அரசாணைகளாக அறிவிக்க வேண்டும்.

ஆனால், **மலைப்பாம்பு தன் இரையை வளைத்த பிறகு அந்த இரை அதனிடமிருந்து தப்ப முடியாது** என்பது போல், இனிமேல் இராசராசனும் பிறமண்ணினர்களின் பிடியிலிருந்து விடுபட்டுத் தமிழ் மொழியையோ! தமிழ் இனத்தையோ! காப்பாற்ற முடியாது! காப்பாற்ற முடியாது! காப்பாற்ற முடியாது! காப்பற்றவே முடியாது! எனவேதான், யாம் நிலவறைக்குள் செல்வதாக முடிவெடுத்தோம்.

நிலவறைக்குள் செல்லும் நேரத்தில்தான், அரச குடும்பத்தார்களின் வேண்டுகோள்களை எண்ணிப் பார்த்து கருவூர்த் தேவனையே அனைத்து முடிவுகளையும் எடுத்துக் கொள்ளுமாறு கூறி அருட்பேரரசு காத்திட ஆவன செய்து செல்லுகிறோம். நிறைவுறாமல் இருக்கும் தஞ்சைப் பெரிய கோயில் போல்; அரசாணைகளாக நிறைவேறாமல் இலக்கிய வடிவிலேயே நிற்கும் பதினெட்டு அருளாட்சி ஆணைகள் போல்; தமிழினம் காக்கத் தெரியாமல் தடுமாறும் இராசராசனின் நிலை முழுமையடையாமலேயே இருக்கும்.

எமக்குப் பிறகாவது அவன் திருந்தாவிடில், இவனுடைய அண்ணன் ஆதித்த கரிகாலனுக்கு நேர்ந்த கதியே இவனுக்கும் நேரிடும். அதாவது, இவன் எதுவரை பிருமணர்களுக்கும், பணக்காரர்களுக்கும் ஆதரவாளனாக இருக்கின்றானோ, அதுவரைக்கும்தான் இவனுக்குப்

பாதுகாப்பு உண்டு. இல்லையேல், அவர்களால் எந்த நொடியும் இவனுக்கு இழிவும், அழிவும் ஏற்படும்.

எனவே என்றைக்காவது ஒரு நாள் தமிழ்நாட்டுச் சமயவாதிகளும், அரசியல்வாதிகளும் தங்களைத் தாங்களே நன்கு புரிந்து பிற மொழியார்களையும், பிற இனத்தார்களையும் தமிழ்நாட்டின் எந்தத் துறையிலும் தலைவர்களாகவோ, வழிகாட்டிகளாகவோ, வழித் துணைவர்களாகவோ, முதலாளிகளாகவோ ஏற்காத ஒரு பொற்காலத்தை உருவாக்குவார்கள்! உருவாக்குவார்கள்! உருவாக்குவார்கள்! அப்பொற்காலம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்திலாவது உருவாகியே தீர வேண்டும். இல்லையேல், நாற்பத்தெட்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் காலம் வரை **மெய்யான இந்துமத** மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்கள்; நாடோடிகளாகவும், நாதியற்றவர்களாகவும், அடிமைகளாகவும், போலிகளாகவும், கூலிகளாகவுமே தொல்லைப்பட்டுத் துன்பப்பட நேரிடும்.

அந்த நிலை வந்துவிடக் கூடாது என்பதற்காகவே இம்மண்ணுலகம் முழுவதும் சுற்றி அனைத்து வகையான அருளுலக வாரிசுகளையும் உருவாக்கினோம் யாம். அவர்களால் உலக ஆன்மநேய ஒருமைப்பாடு ஏற்படும் காலத்திலாவது **மெய்யான இந்துமதத்தின்** மூலவர்களாகவும் காவலர்களாகவும் இருப்பவர்களுக்கு நலம் விளைந்திடும். அந்த எண்ணத்தின் நிம்மதியில்தான் நிலவறைக்குள் செல்கிறோம். யாம் ஏட்டளவிலும், நாட்டளவிலும் விட்டுச் செல்லுபவைகளையாவது நம்மவர்கள் உரியவர்களிடமிருந்து முழுமையாகத் தெரிந்து, அறிந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பிப் பெரிய அளவில் தமிழ்மொழி காக்க, தமிழ் இனம் காக்க, தமிழ்நாடு காக்கப் போராடும் பொற்காலம் உருவாகட்டும்! உருவாகட்டும்! உருவாகட்டும்!

-------------------------------

## பின்குறிப்பு

இந்தப் '<u>பதினெண் சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்</u>' என்ற கட்டுரை சேலம் மாவட்டம் மோகனூர் உருத்திரம் பிள்ளையால் உரைநடையில் எழுதப்பட்டு (அதுவரை இந்தப் பதினெண் சித்தர் பீடாதிபதியின் அருளாட்சி ஆணைகள் கவிதை நடையில் இருந்திட்டன), கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம் பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளையால் மீண்டும் படியெடுக்கப் பட்டது.

பிறகு, இந்த ஆணைகள் கரூர் முடிகணம் காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காக்கையர் எனப்படும் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட "தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதிேனாராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரின் வரலாற்றின்" பன்னிரண்டு தொகுதிகளில் பன்னிரண்டாவது தொகுதியின் இறுதிப் பகுதியாக அமைக்கப் பட்டிருக்கிறது.

எனவே, அருட்பேரரசாக உருவாக்கப் பட்ட பிற்காலச் சோழப் பேரரசு பற்றிய [கி.பி.785 முதல் கி.பி.1279 முடிய] பேருண்மைகளைத் தெரிந்து கொள்ளவாவது தமிழர்களில் யாராவது சிலர் அல்லது ஒருவர் பேரார்வத்துடன் முன்வந்தாவது இந்தப் பன்னிரண்டு வரலாற்றுத் தொகுதிகளையும் வெளிக் கொணரும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கட்டுரை வெளியிடப் படுகிறது.

இதிலுள்ள எந்த ஒரு சொல்லோ, கருத்தோ பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாலோ, அல்லது வேறு யாராலோ கூறப்படவில்லை! கூறப்படவில்லை! கூறப்படவில்லை! கூறப்படவேயில்லை! அதாவது, இந்தக் கட்டுரையிலுள்ள எந்த ஒரு சொல்லும் குருவழி வாரிசுகளாலோ அல்லது கருவழி வாரிசுகளாலோ எழுதப் படவில்லை! எழுதப் படவில்லை! எழுதப் படவில்லை! எழுதப் படவேயில்லை! ஏனெனில், இக்கட்டுரையிலுள்ள பெரும்பாலான சொற்களும்

சொற்றொடர்களும் கருத்துக்களும் இந்த இருபதாம் நூற்றாண்டின் பிரதிபலிப்புக்கள் போலவே இருக்கின்றன.

எனவே, 'பலமுறை உலகச் சுற்றுப்பயணங்களைச் செய்த ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களுடைய தொலைநோக்கும், அநுபவம் மிக்க போக்கும்தான் இந்த அருளாட்சி ஆணைகளின் வாக்கியங்களாகவும், வாசகங்களாகவும் வடிவெடுத்திருக்கின்றன' என்பதனை இன்றுள்ள தமிழர்களாவது புரிந்து கொள்ள வேண்டும்! புரிந்து கொள்ள வேண்டும்! புரிந்து கொள்ள வேண்டும்!

அப்பொழுதுதான் தமிழ்மொழிக்கும், இனத்துக்கும், பண்பாட்டுக்கும், நாகரிகத்திற்கும் கலைக் களஞ்சியங்களாக விளங்குகின்ற பீடாதிபதிகளின் படைப்புக்களனைத்தும் முழுமையாக அச்சேறி வெளிவரக் கூடிய பொன்னான வாய்ப்பு உருவாகிடும்! இன்னும் சொல்லப் போனால், சித்தர்களின் நெறிகள், முறைகள், கலைக் கருவூலங்கள், அறிவியல் சாதனைகள், அருளுலகப் போதனைகள் .... முதலியவைகள் அனைத்தும் வெளி வந்தால்தான் இம்மண்ணுலகின் வரலாறு முழுமை பெறும்! முழுமை பெறும்! முழுமை பெறும்! இப்பணியில் ஆர்வம் உள்ளவர்கள் ஆரவாரமின்றி அமைதியாகப் பணியாற்றத் தொடர்பு கொள்க!

---

**[உண்மை நகல்]**

நகல் நல்குபவர்: அருள்மிகு கபாலீசுவரி சன்னிதானம், குருவழி வாரிசு, குருவின் பதிலி சீ.மணி, 24/8/87, நள்ளிரவு 12.35மணி.

**//இதன் மூலநகல்: வேம்படிதாளம் சித்தரடியார் சீ.மணி அவர்களால் எழுதப் பட்ட கையெழுத்துப் பிறதி நகல்.//**

# அருணகிரியார் வரலாற்றில் பொய்யான ஹிந்துமதத்தின் ஆபாசக் கற்பனை

"அருணகிரியார் பெண்ணின்பத்தை அதிகமாகத் துய்த்து தொழுநோய் வந்து தற்கொலை செய்து கொள்ள முயன்று முருகப் பெருமானுல் தடுத்து ஆட்கொள்ளப் பட்ட ஞானியார்" - என்று (பிறமண்ணினர்) பிருமணரால் ஒரு வரலாறு கூறப்பட்டு வருகிறது. இது முற்றிலும் தவருன, சூழ்ச்சியான, மோசடியான வரலாருகும்.

அதாவது, பல்லாயிரக் கணக்கான தமிழ் அருட்பாக்களைப் பாடிய மாபெரும் கவிஞரான அருணகிரியாரை அவமானப் படுத்துகின்ற முறையில் அல்லது இழிவுபடுத்துகின்ற முறையில் பிருமணர்கள் மேற்படி வரலாறைக் கற்பனையாக பரப்பியிருக்கிருர்கள். இம்மாபெரும் உண்மையை கண்டப்பக்கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை அவர்கள் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். இதனைத் தமிழுலகம் உணர்ந்தும், உணர்த்தியும் செயல்பட்டால்தான் **மெய்யான இந்துமதம்** பிழைக்கும், தழைக்கும்.

முதற்சங்க காலத்தில் வாழ்ந்த சிவகவி என்பவர் "சிவபெருமானைத்தான் பாடுவேன்; கோழியை பாடிய வாயால் முட்டையைப் பாடமாட்டேன், அப்பனைப் பாடிய வாயால் ஆண்டிச் சுப்பனைப் பாடமாட்டேன் ..." என்று மிகப் பிடிவாதமாக சிவனைத் தவிர மற்ற கடவுள்களைப் பாட மறுத்து வாழ்ந்தார். இவரைப் போலவேதான், சில நூற்ருண்டுகளுக்கு முன்ஞல் வாழ்ந்த

அருணகிரியார் "முருகனைத்தான் பாடுவேன், வேறு யாரையும் பாட மாட்டேன்" என்று பிடிவாதமாக வாழ்ந்தார். அவருக்கு வழக்கம்போல் சிவபெருமான் பல சோதனைகளை வழங்கினார். அவற்றின் எல்லையாகத்தான் அருணகிரியார் தான் வணங்கும் முருகன் தன்னைக் காப்பாற்றுவான் என்று கூறி திருவண்ணாமலை கோபுரத்தின் உச்சியில் இருந்து கீழே குதித்து தற்கொலை செய்து கொள்ளும் முயற்சி நிகழ்ந்தது. இதுதான் உண்மை. இதுவல்லாமல் அவர் தொழுநோயால் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொள்ள முயன்றுதான் கோபுர உச்சியிலிருந்து குதித்தார் என்று கூறுவது தவறு. அப்படிக் கூறுவதுதான் *பொய்யான ஹிந்துமதம்.*

அருணகிரியாரை இழிவுபடுத்துவதின் நோக்கம் **மெய்யான இந்துமத**த்தை செயலற்றதாக ஆக்க வேண்டும் என்ற பிருமணச் சூழ்ச்சியேயாகும். இதனை உணர்ந்து, இனிமேலாவது தமிழர்கள் அருணகிரியாரைப் பற்றி மெய்யான வரலாற்றை பரப்புவதன் மூலம்தான் **மெய்யான இந்துமத**த்தைக் காப்பாற்ற முடியும். அதாவது, பிருமணர்கள் **மெய்யான இந்துமத**த்தைப் பற்றிய தவறான கருத்துக்களையும், செய்திகளையும், வரலாறுகளையும் உருவாக்கியதன் மூலம்தான் **மெய்யான இந்துமத**த்தின் அரிய தன்மைகளையும், பெருமைகளையும், சிறப்பான பயன்களையும், பகுத்தறிவுக்கு ஒத்த நிலைகளையும், விஞ்ஞானப் பூர்வமான தத்துவங்களையும் பாழாக்கினார்கள்! பாழாக்கினார்கள்!! பாழாக்கினார்கள்!!!

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் **மெய்யான இந்துமதம்** பதினெண்சித்தர்களின் வரலாறுகளையும், வாழ்வியல்களையும், சாதனைகளையும், மூல போதனைகளையும் அப்படியே உள்ளீடாகவும், வடிவமைப்புக்களாகவும் கொண்ட ஒன்றாகும். இந்த **மெய்யான இந்துமத**த்தைச் சிதைத்துச் சீரழித்தால்தான் தங்களுக்குப் புதுவாழ்வும்

நிலையான வாழ்வும் இந்தியாவில் உண்டு என்று முடிவெடுத்துச் செயல்பட்டு வருகிறார்கள் பிருமணர்கள். எனவேதான், "பிருமண மறுப்பும், எதிர்ப்பும்தான் **மெய்யான இந்துமத**த்தை மறுமலர்ச்சி அடையச் செய்யும்" என்ற கருத்தை உருவாக்கினார் சித்தர் ஏளனம்பட்டியார். ஆனால், கண்மூடித்தனமான பிருமண வெறுப்போ, ஒழிப்போ ஏளனம்பட்டியாரின் கருத்தல்ல. அதாவது, பிருமணர்களையும் திருத்தி **மெய்யான இந்துமத**த்தால் அவர்களும் நன்மையடையும்படிச் செய்ய வேண்டியதுதான் இந்து மறுமலர்ச்சி இயக்கக் கொள்கை!

இந்துமதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்களே மீண்டும் வந்தால்தான் இந்துமதக் கடவுள்களைப் பற்றிய வரலாறுகளில் பிருமணர்கள் செய்துள்ள குழப்பங்களையும், கலக்கங்களையும், இருட்டடிப்புக்களையும், திருத்தல்களையும், இடைச்செருகல்களையும் அடையாளம் கண்டுபிடித்துத் திருத்த முடியும் என்ற அளவுக்குத் திறமையாகப் பிருமணர்கள் செயல்பட்டுள்ளார்கள். எனவேதான், இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேலாக இ.ம.இ. செயல்பட்டும் *பொய்யான ஹிந்துமத*த்தை அழிக்க முடியவில்லை. **மெய்யான இந்துமத**த்தை செழிக்கச் செய்ய முடியவில்லை.

மேற்கூறிய *பொய்யான ஹிந்துமத*த்தால்தான் சிவபெருமான், திருமால், பிறமண், முருகன், பிள்ளையார், விநாயகர், கணபதி, ஐயனார் (ஐயப்பன்), இராமன், கண்ணன், பிற அருளாளர்கள் ... முதலியோரின் வரலாறுகள் அறிவுக்குப் பொருந்தாதவைகளாகவும், ஆபாசம் மிகுந்தவைகளாகவும் உருவாகியுள்ளன. எனவே, **மெய்யான இந்துமத**த்திற்காக மீண்டும் உண்மையான வரலாறுகளையும், செய்திகளையும், செயல்பாடுகளையும், தத்துவங்களையும், இலக்கியங்களையும் ... எடுத்து விளக்கிக் கூறுவதை விட *பொய்யான ஹிந்துமத*த்தில் உள்ள தவறுகளையும், இடைச்செருகல்களையும்,

திருத்தல்களையும், இருட்டடிப்புகளையும் நேரடியாகக் கண்டித்துத் திருத்தும் பணியில் இறங்க வேண்டும். இதைப் பிருமணர்களோ, நம்மவர்களோ தேவையற்றது என்றோ! தவறானது என்றோ! கருதுவதோ, எதிர்ப்பதோ தற்கொலைக்குச் சமமாகும். ஏனென்றால், பிருமணர்கள் அல்லாதவர்கள்தான் பிருமணர்களுக்காக வக்காலத்து வாங்குவது அதிகமாக இருக்கிறது.

இன்னும் சொல்லப் போனால், பிருமணர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து திருந்தத் தயாராக இருந்தாலும், அவர்களைத் திருந்த விடாமல் செய்பவர்களாகவே எண்ணற்ற பிருமண அடிமைகளும், கூலிகளும், இந்துமதத் துரோகிகளும், எதிரிகளும் செயல்படுகிறார்கள். எனவே, பிருமணர்களைத் திருத்தும் போதே பிருமண அடிமைகளையும், கூலிகளையும், இந்துமதத் துரோகிகளையும், எதிரிகளையும் திருத்தும் பணி மேற்கொள்ளப்படல் வேண்டும். இதில் எந்தவிதமான தயக்கமோ, மயக்கமோ, குழப்பமோ, கலக்கமோ, ... கூடாது! கூடாது!! கூடாது!!! கூடவே கூடாது!

*பொய்யான ஹிந்துமதத்*தில்தான் முருகனுடைய பிறப்பும், ஐயப்பனின் பிறப்பும், பிள்ளையாரின் பிறப்பும் ஆபாசப்படுத்தப் பட்டிருக்கின்றன, அநாகரீகப் படுத்தப் பட்டிருக்கின்றன, அறிவுக்குப் புறம்பாக்கப் பட்டிருக்கின்றன. எனவே, **மெய்யான இந்துமத**த்தைப் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் எழுதிவரும் 'குருபாரம்பரியம்' என்கின்ற மத வரலாறுகளின் மூலமும், 'இலக்கிய பாரம்பரியம்' என்கின்ற இலக்கிய வரலாறுகளின் மூலமும், 'அரசபாரம்பரியம்' என்கின்ற அரசியல் வரலாறுகளின் மூலமும், எண்ணற்ற வாக்குகள், வாக்கியங்கள், வாசகங்கள், ... முதலியவற்றின் மூலமும் வழங்கப்படும் கருத்து விளக்கச் சொற்களின் மூலம் புதுப்பித்து எழுதுதல் வேண்டும்.

அப்படி **மெய்யான இந்துமத** வரலாறு எழுதப்பட்டு விட்டால் 'மதம்தான் மனிதர்களை மனிதர்களாகக் காத்திடும்' என்பதும், 'மதமே மனிதப் பண்பாட்டிற்கு வேலி' என்பதும் மிகத் தெளிவாகிடும். இதனால், நாத்திகர்களும், பகுத்தறிவுவாதிகளும், மார்க்சீய வாதிகளும் மதத்தின் தேவையையும் பயனையும் உணர்ந்திடுவார்கள், ஒப்புக் கொண்டிடுவார்கள். இவர்கள் மதத்தைக் குறை கூறுவதும், குற்றம் சாட்டுவதும், கேலி செய்வதும், எதிர்ப்பதும் இ.ம.இ.யினால்தான் முழுமையாக தடுக்கப்படும், அகற்றப்படும், மாற்றப்படும். இதனைப் புரிந்து **மெய்யான இந்துமத**த்தை வளர்க்க, விளக்க, ஆட்சிபெறச் செய்ய பிருமணர்களும் திருந்தி நம்மோடு சேரட்டும்.

இதனைத் தலைமைப்பீடத்திலிருந்து நகலெடுத்தவர்: சித்தரடியான் சா.ஆறுமுகம், 82-B, மேலத்தெரு, முசிறி-621211

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: கையெழுத்துப் பிறதியாகக் கிடைத்தது. நகலில் குறிப்பிட்டுள்ள படி முசிறிச் சித்தரடியான் திரு சா.ஆறுமுகம் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

***ஆதாரம்:** மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.

தெய்வந் தொழும் பெருநிலை பெற்றோர் சித்தர்.



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.books.gurudevar.org Email: indhuism@gmail.com